www.tamilarangam.net

Bund Sozialistischer Arbeiter

# இலங்கையில் யுத்தமும் தொழிலாளவர்கத்திற்கான முன்னோக்கும்

ஜனவரி 31ம் திகதி சிறீலங்காவின் தலைநகரான கொழும்பின் மையத்தினை பெரு அழிவுகளுக்குள்ளாக்கி எண்பதிற்கும் மேற்பட்ட நிராயுதபாணிகளை பலியெடுத்த குண்டு வெடிப்பானது இந்துசமுத்திரத்தின் இந்தத் தீவினை மீண்டும் ஒரு குறுகிய காலத்திற்கு தலைப்புச் செய்திகளுக்கு கொண்டுவந்தது. இருந்த போதிலும் இந்த இரத்தக்களரியானது குமாரதுங்காவின் மக்கள்முன்னணி" அரசாங்கம் ஜேர்மனியும் பின்நிற்காத சர்வதேச ஆதரவுடன் தமிழ்மக்கள் மீது நாளுக்குநாள் மேற்கொள்ளப்படும் காட்டுமிராண்டித்தனமான இனவாதயுத்தத்தின் ஒரு உச்சக்கட்டம் மட்டுமேயாகும்.

அதேநேரத்தில் இது ஒடுக்குமுறை வறுமையென்ற விசச்சுழலிற்குள் அல்லல்படும் தீவின் மக்களுக்கு அதிலிருந்து வெளியேறும் வழியைக் காட்டுவதற்கு கொரிலா இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் முற்றிலும் லாயக்கற்றது என்ற அதனது அரசியல் வங்குரோத்தினையும் வெளிப்படுத்துகின்றது.

இந்தக் குண்டுவெடிப்பானது அரச படைகள் முக்கிய தமிழ் நகரமான யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 500000 ற்கும் மேற்பட்ட தமிழர்களை அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டியடித்து இரண்டு மாதங்களின் பின்னர் நடந்தேறியது. ஜனவரி மாதத்தின் தொடக்கத்திலிருந்து இந்த மாதிரியான அரசபடைகளின் இராணுவ நடவடிக்கைகள் தீவின் கிழக்குப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் பொதுமக்கள் யாழ்ப்பாணத்து மக்களின் நிலைமைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

குமாரதுங்கா பன்னிரெண்டு வருடகாலமாக தொடரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவதாக கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் சிறீலங்காவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அப்படியிருப்பினும் கடந்த வருடத்தின் ஒக்டோபர் மாதத்திலிருந்து இவருக்கு முன்னர் ஆட்சியிலிருந்த பழைமைவாதிகள் ஒருபோதும் நினைத்துப் பார்க்க முடியாதளவிற்கு போர் உக்கிரப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் போர் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட்கட்சி முன்னாள் ட்றொக்சிசக் கட்சியான லங்காசமசமாஜக்கட்சி மற்றும் ஏனைய தீவிரவாத குட்டிமுதலாளித்துவக் கட்சிகளால் ஆதரவளிக்கப்பட்டு நடாத்தப்படுகின்றது. நாட்டின் மிகக்குறைவான வருமானம் யுத்த விமானங்களையும் கெலிகொப்டர்களையும் பீரங்கிப்படகுகளையும் ஏனைய இராணுவத் தளபாடங்களையும் இஸ்ரேல் சீனா ரஷ்யாவிலிருந்து வாங்கிக் குவிப்பதில் மண்ணாக்கப்படுகின்றது. பத்திரிகையாளர்கள் போர்ப் பிரதேசத்திற்குச் செல்வதற்கான அனைத்து வழிகளும் தடைசெய்யப்பட்டு பொதுமக்கள் மேல் பயங்கரவாதத்தை கட்டவிழ்ப்பதற்கான தங்குதடையற்ற அனுமதி இராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் விளைவுகள் எழுத்தில் வழங்கப்படமுடியாத நிலைமைகளில் அரசாங்கத்தினால் திட்டமிட்ட வகையில் பட்டினி போடப்பட்டு அகதிகள் முகாம்களில் குடியிருக்கும் வடக்கின் தமிழ்மக்கள் மீது மட்டுமல்ல தெற்கின் சிங்களமக்கள் மீதும் சுமத்தப்படுகின்றது. யுத்தத்தின் பாரிய செலவுகள் இவர்களின் தோள்களில் பொறுக்கப்படுகின்றது. அத்துடன் குமாரதுங்காவினால் பலப்படுத்தப்பட்ட இராணுவமானது அதிகாரத்தினை நோக்கி தங்களது சொந்தக்கரங்களை நீட்டுவதன் மூலம் ஒரு இரத்தம் தோய்ந்த சர்வாதிகாரத்தை உருவாக்கும் ஆபத்திற்கும் இவர்கள் தொடர்ச்சியாக முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இப்படியான ஒரு சர்வாதிகாரமானது ஏற்கனவே மலிந்த கூலியுழைப்பு சுவர்க்கமான சிறீலங்காவில் பலதேசிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் மோசமான சுரண்டலுக்கெதிராக தொழிலாளர்கள் தொடங்கும் எதிர்ப்பினை முளையில் கிள்ளுவதற்கான பணியை மேற்கொள்ளும் குமாரதுங்காவின் இந்த யுத்தம் அமெரிக்க அதேபோல் ஜேர்மன் அரசாங்கங்களினால் ஒரேமனதாக ஆதரவளிக்கப்படுவதற்கான காரணமும் இதனாலாகும்.

அரசாங்கத்தின் இந்த இனவாத யுத்தம் எந்தவிதத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளது நடவடிக்கைகளை நியாயப்படுத்தவில்லை. இவர்களது குண்டுத் தாக்குதல் கொழும்பின் பொதுமக்களுக்கும் விசேடமாக தொழிலாளவர்க்கத்திற்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலினால் பெரும்பான்மையாக தகர்க்கப்பட்ட மத்தியவங்கியின் தொழிலாளர்கள் யுத்தத்திற்கெதிரான எதிர்ப்பின் ஒரு

Revolutionary Communist League (Exilorganisation)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்